சிந்தனை
தொகுதி V
இதழ் I, II - 1993

# அடங்காப்பற்று வன்னிமைகள்

— சி. பத்மநாதன் —

ஒல்லாந்தரின் மேலாட்சிக் காலத்திற்குரிய (1658 - 1796) அடங்காப்பற்று வன்னிமைகளின் வரலாற்றைப் பொறுத்தவரையிலே தேசாதிபதிகள், கொம்மாந்தர்கள் போன்ற உயரதிகாரிகள் எழுதிய அறிக்கைகளே பிரதான வரலாற்று மூலங்களாக அமைகின்றன. அவற்றில் அடங்காப்பற்றிலுள்ள வன்னிப்பிரிவுகள், அவற்றுக்குப் பொறுப்பாகவிருந்த வன்னியர்கள், வன்னியருக்கிடையில் நிலவிய உறவுகள் கொம்பனி அரசாங்கத்திற்கும் வன்னியர்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் போன்ற விடயங்களைப் பற்றி விரிவான குறிப்புகளும் அரிய சான்றுகளும் இடம்பெற்றுள்ளன.[1] ஆயினும் குறிப்பிட்ட சில காலப்பகுதிகளைப் பொறுத்த வரையில் இத்தகைய ஆவணங்கள் கிடைக்கவில்லை. கெந்திரிக்கு வெக்கர், (Hendrick Becker) 1709 - 1716, ஜான் சுரோய்டர், (Jan Schreuder) 1756 - 1762, ஆகியோரின் காலங்களுக்கு இடைப்பட்ட தேசாதிபதிகளின் அறிக்கைகளிலே வன்னிமைகளைப் பற்றிய விபரங்கள் இடம்பெறவில்லை. அதனாற் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியைச் சேர்ந்த வன்னிமைகளின் வரலாறு இதுவரை அறியப்படாதவொன்றாக இருந்து வந்துள்ளது.

வன்னிமைகளின் வரலாற்றிலிருந்த இந்த இடைவெளியை நிரப்புவதற்கான வாய்ப்புக்கள் இப்பொழுது ஏற்பட்டுள்ளன. கொழும்பிலுள்ள தேசிய ஆவணச்சுவடிகள் நிலையத்திற் கொம்பனியின் உயரதிகாரிகளோடு வன்னிபங்கள் ஏற்படுத்திய உடன்படிக்கைகளின் பிரதிகள் உள்ளன. இவற்றை இதுவரை எவரும் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. அவை டச்சு, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன. கெந்திரிக்கு வெக்கர், ஜான் சுரோய்டர் ஆகிய தேசாதிபதிகளின் பதவிக் காலங்களுக்கு இடைப்பட்ட அடங்காப்பற்று வரலாற்றைப் பொறுத்தவரையில் இவ்வுடன்படிக்கைகளே பிரதான வரலாற்றுமூலங்களாயுள்ளன. அவற்றுள் இரண்டு ஆவணங்கள் பனங்காமப்பற்றினைப் பற்றியனவாகும், இரு ஆவணங்கள் கரிக்கட்டுமூலை, கருநாவல்பத்து என்ற வன்னிமைகளைப் பற்றியவை. நான்கு ஆவணங்கள் தென்னமரவடிப் பற்று வன்னிபங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. மற்றையது மேல்பத்து - முள்ளியவளைக்குப் புதிய வன்னிபம் கற்பிக்கப்பட்டமை பற்றிய நியமனப்பத்திரமாகும். இதுவரை வெளியிடப்பெற்ற ஆவணங்களிலும், நூல்களிலும், ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் இடம்பெறாத பல செய்திகள் இவற்றிலே கிடைக்கின்றன. மேலும் இதுவரை தேடிப்பெறப் பெற்றுள்ள ஆவணங்களுள் இவற்றில் மட்டுமே வன்னிபங்களின் நியமனங்களைப் பற்றிய கட்டளைப் பத்திரங்கள் கிடைக்கின்றன. பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரிய அடங்காப்பற்று வன்னிபங்கள், வன்னிபங்களுக்கும் கொம்பனி அரசாங்கத்திற்கும் இடையிலான தொடர்புகள் போன்ற விடயங்களை அறிந்து கொள்வதற்கு இவை பெரிதும் பயன்படுகின்றன.

இக் கட்டுரைக்கு ஆதாரமாகவுள்ள ஆவணங்களெல்லாம் கொம்பனி அரசாங்கத்திற்கும் வன்னிபங்களுக்குமிடையிலான உடன் படிக்கைகளாக உள்ளபொழுதிலும் அவையெல்லாம் ஒல்லாந்த அதிகாரிகளினாலே தயாரிக்கப்பட்டவை என்பது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இரு

தரப்பினரும் சமநிலையிலிருந்து இவற்றை எழுதிக்கொள்ளவில்லை. இரு சாராரினதும் கருத்துக்கள், குறைபாடுகள், தேவைகள் போன்றவற்றை ஆராய்ந்தும் அவை எழுதப்படவில்லை. கொம்பனி அதிகாரிகளின் நிபந்தனைகளையே அவை பெருமளவிற்குப் பிரதிபலிக்கின்றன. இரு தரப்பினருக்கும் இடையிலான 'பொருத்தம்' 'ஒப்பந்தம்' என்று அவை வர்ணிக்கப்பட்டுள்ள பொழுதிலும் கொம்பனி அரசாங்கத்தின் கட்டளைகள் அல்லது பிரமாணங்கள் என்று கொள்ளத்தக்க பாணியில் அவை அமைந்துள்ளன.

மானிய முறையில் அமைந்த அரசியலமைப்பினைப் பற்றித் தமிழ்மொழியிலே எழுதப்பட்ட உடன்படிக்கைகள் என்ற வகையிலும் இவ்வாவணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழில் எழுதப்பட்ட இவற்றைப் போன்ற வேறு ஆவணங்கள் இலங்கையிற் கிடைக்கவில்லை. சிங்கள மொழியிலும் இத்தகைய ஆவணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. புத்தளத்து முக்குவ வன்னிபங்களுக்குச் சிங்கள மன்னர் கொடுத்த மூன்று ஆவணங்கள் கிடைத்துள்ளன.[2] ஆனால் அவை பதவியும் வரிசைகளுங் கொடுக்கப்பட்டமை பற்றிய நியமனப் பத்திரங்களாகும். அவற்றிலே வன்னிபங்கள் செலுத்தவேண்டிய கடமைகள், அவர்களின் பொறுப்புக்கள் என்பன பற்றிய குறிப்புக்களெதுவுமில்லை. அடங்காப்பற்று வன்னிபங்களைப் பற்றிய உடன்படிக்கைப் பத்திரங்களும் நியமனப்பத்திரங்களும் மேலாதிக்கஞ் செலுத்தும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வன்னிபங்கள் கொண்டிருந்த தொடர்புகளை மானியமுறைக் கோட்பாடுகளுக்கேற்ப வர்ணிக்கின்றன. இங்கு ஆதாரமாகக் கொள்ளப்படுகின்ற ஆவணங்களில் வரும் சான்றுகளின் துணைகொண்டு குறிப்பிட்ட காலத்திற்குரிய வன்னிபங்களைப்பற்றிய விபரங்களை மேல்வருமாறு அட்டவணைப் படுத்திக் கொள்ளலாம்.

| வன்னிப்பிரவு | வன்னிபம் |
|---|---|
| 1. பனங்கமாம் | தொம் பிலிப்பு நல்லமாப்பாணர். |
| 2. கரிக்கட்டுமூலை<br>3. கருநாவல்பத்து | 1. தொம் தியோக புவிநல்லமாப்பாணர் ( 1697 - 1715, 1720 - 1747 )<br>2. தொம் தியோக அகிலேசன் புவிநல்லமாப்பாணன் ( 1747 - 1766 ) |
| 4. மேல்பத்து<br>5. முள்ளியவளை | 1. தொங் கஸ்பார் இலங்கை நாரண முதலியார் ( 1715 - 1747 )<br>2. தொங் கஸ்பார் இலங்கை காவல புவிநல்ல மாப்பாண வன்னியனார் ( 1747 - 1757 ) |
| 6. தென்னமரவடிப்பற்று | 1. தொம். அதிரியலு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் (1722 - 1738 )<br>2. தொம் பிறான்சிஸ்கோ சண்முகப் பெருமாள் சேதுகாவல. மாப்பாண வன்னியனார் ( 1739 - 1745 )<br>3. தொம் யுவாம் சேதுகாவல மாப்பாண வன்னியனார். ( 1745 - 1765 ) |

## 1. பனங்காமப்பற்று வன்னிபம்: நல்லமாப்பாணர்

பனங்காமத்து வன்னிபங்களிற் சிலர் நல்லமாப்பாணர் என்ற பெயரைப் பெற்றிருந்தனர். பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொம் பிலிப்பு நல்லமாப்பாணர் என்பவர் பனங்காமத்திலே வன்னிபமாயிருந்நார்.[3] கயிலை வன்னியனின் பதவிக்கால முடிவிலே பனங்காமத்தில் இரண்டாவது வன்னிபமாயிருந்த நல்லமாப்பாணர் கயிலை வன்னியன் இறந்தபின்பு அப்பற்றிலே முதன்மை வன்னிபமானார். பதினேழாம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பெற்ற ஒல்லாந்தரின் குறிப்புக்கள் இவரை ஒரு வயோதிபர் என வர்ணிக்கின்றன. இவரின் பதவிக் காலத்தில் தொங் கல்பார் இலங்கை நாரண வன்னியனார் என்பவரும் பனங்காமத்திலே வன்னிபமாயிருந்தார். இவர்களிருவரும் மைத்துனராவர்.[4] பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவர்கள் மறைந்த பின்பு பனங்காமத்திலே நிச்செயச் சேனாதிராயன், குலசேகர முதலியார் என்னுமிருவரும் வன்னிபங்களாயினர்.[5] இவர்களுள் நிச்செயச் சேனாதிராயன் நல்லமாப்பாணரின் மகனாவார். இவர்களிருவரும் பதினெட்டாம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியிற் பனங்காமத்தில் அதிகாரஞ் செலுத்தினார்கள். இவர்களுக்குப் பின்பு நல்லமாப்பாணர் என்பவரே பனங்காமப்பற்றிலே வன்னிபமானார் என்பதை இவ்வாவணங்கள் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிற் பனங்காமத்தில் வன்னிபமாயிருந்த நல்லமாப்பாணர் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த நல்லமாப்பாண வன்னியனாரின் வழிமுறைச் சந்ததியினராதல் வேண்டும். கொம்பனியின் அரசாங்கம் நல்லமாப்பாணரோடு 1738, 1740 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்திய உடன்படிக்கைகளைக் குறிப்பிடுகின்ற ஆவணங்களிலே நல்லமாப்பாணர் எப்போது வன்னிபமாக நியமனம் பெற்றார் என்பதனைப் பற்றிய குறிப்பெதுவுங் காணப்படவில்லை. ஆயினும் அவற்றிலுள்ள விபரங்களிலிருந்து 1738 ஆம் ஆண்டுக்கு முற்படப் பலவாண்டுகளாகவே அவர் பதவியிலிருந்தார் என்பது தெளிவாகின்றது. பனங்காமப்பற்றோடு மேலதிகமாக ஆத்திமோட்டை, தியாத்து, புலோக்காடு, கரைச்சி தெற்கு போக்கறுப்பு, முள்ளியான் என்ற ஊர்களையும் நல்லமாப்பாணர் பெற்றிருந்தார்.[6] எனவே தொம் பிலிப்பு நல்லமாப்பாணர் தான் வன்னிபமாகிய காலப்பகுதியிற் கொம்பனியதிகாரிகளின் விசுவாசத்திற்குரியவராகவும் வன்னிப் பகுதியில் அதிக செல்வாக்குடையவராகவும் விளங்கினார் என்று கருத இடமுண்டு.

நல்லமாப்பாணர் நியமனம் பெற்ற காலத்தில் அவர் தன்பேரிலுள்ள பிரதேசங்களின் பொருட்டு 30 கடமை யானைகளைக் கொடுக்க வேண்டுமென்று உடன்பாடாகியிருந்தது. அதன் விபரம் மேல் வருமாறு அமைந்தது.

| | | |
|---|---|---|
| 1. | பனங்காமம் | - 16 யானைகள் |
| 2. | ஆத்திமோட்டை, தியாத்து | - 3 யானைகள் |
| 3. | போக்கறுப்பு, முள்ளியான் | - 2 யானைகள் |
| 4. | கரைச்சி தெற்கு, புலோக்காடு | - 9 யானைகள்.[7] |

வன்னிபங்கள் கடமையானைகளைக் கொம்பனியின் அரசாங்கத்திற்குச் சரிவரக் கொடுக்காதவிடத்து குறைபடுகின்ற யானைகளுக்கு அலியன் யானை ஒன்றுக்கு 1,000 பறை நெல்லு அல்லது 280 இறையால் என்ற பிரகாரமாகக் கப்பஞ் செலுத்துவதற்கு ஏற்பாடாகியிருந்ததென்பதை இவ்வுடன்படிக்கையின் மூலம் அறிய முடிகின்றது. நல்லமாப்பாணர் கடமையானைகளைச் சரிவரக் கொடுக்காதபடியால் அவர் பேரில் நின்ற நிலுவை யானைகளின் தொகை பெரிதாக வளர்ந்தது. ஒல்லாந்தருக்குத் தேவையான யானைகளைப் பிடித்துக் கொடுப்பதில் வன்னியருக்குப் பல சிரமங்கள் ஏற்பட்டன. பணிக்கர், தலையர் முதலிய சமுதாயப் பிரிவினரே யானை வேட்டையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்

களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு வன்னிபங்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. யானைகளைப் பிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற காலங்களிலும் போதியளவு யானைகளைப் பிடிக்க முடியாதிருந்தது. வன்னிபங்களின் கட்டுப்பாட்டிற்கப்பாலுள்ள வடமத்திய பிரதேசங்களுக்கு யானைகள் ஓடிவிடுவது வழக்கம். அடங்காப்பற்றிலுள்ள வன்னியர் எல்லோரும் தாம் வருடாவருடம் கொம்பனியின் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய கடமை யானைகளைப் பிடித்துக் கொடுக்க முடியாத நிலையிலிருந்தனர். அதனால் அவர்களின் பேரில் நின்ற நிலுவை யானைகளின் தொகை வளர்ந்து சென்றது.

நல்லமாப்பாணர் பலவாண்டுகளாகவே கடமை யானைகளைச் சரிவரக் கொடுக்காதமையால் அவருக்கு மேலதிகமாகக் கொடுக்கப்பட்டிருந்த ஆத்திமோட்டை, தியாத்து, கரைச்சிதெற்கு, புலோக்காடு, போக்கறுப்பு, முள்ளியான் என்ற ஆறூர்களும் 1738 ஆம் ஆண்டுக்கு முன்பாகவே மீண்டும் கொம்பனியரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் விடப்பட்டன.[8] 1738 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே எழுதப்பட்ட உடன்படிக்கைப் பத்திரத்தில் நல்லமாப்பாணர் கொம்பனி அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய யானை திறையினைப் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றன. அப்போது அவரின் பேரில் நிலுவையாய் நின்ற யானைகளின் தொகை 104 3/4 ஆகும். அதன் விபரங்கள் மேல்வருமாறிருந்தன.

| | |
|---|---|
| பனங்காமம் போக்கறுப்பு, | – 45½ யானைகள் |
| முள்ளியான் | - 8 யானைகள் |
| கரைச்சி தெற்கு, புலோக்காடு | – 51½ யானைகள்[9] |

நல்லமாப்பாணர் யானைகளுக்குப் பதிலாகப் 10,000 பறை நெல்லும் காசும் கொடுத்தபடியால் அவரின் பேரிலிருந்த நிலுவைத் தொகையிலிருந்து 22 யானைகள் கழிக்கப்பட்டன. மேலும் நல்லமாப்பாணர் மிகவும் பரிவாகக் கேட்டுக்கொண்ட படியாற் போக்கறுப்பு, முள்ளியான் ஆகிய ஊர்கள் மீண்டும் அவர் பொறுப்பிலே விடப்பட்டன. புதிய உடன்படிக்கையின் பிரகாரம் நல்லமாப்பாணர் தன் பொறுப்பிலுள்ள பனங்காமம் முதலிய பகுதிகளின் சார்பில்வருடந்தோறும் 18 கடமையானைகளைக் கொம்பனி அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும். மேலும், அவர்பேரில் நின்ற நிலுவைக் கடனைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆண்டுதோறும் மேலதிகமாக 11 யானைகளைக் கொடுக்க வேண்டும் என்றும் ஏற்பாடாகியது.[10] எனவே நல்லமாப்பாணர் 1738 முதல் 1747 ஈறாக ஆண்டுதோறும் 29 யானைகளைக் கொம்பனிக்குக் கொடுப்பதாக உத்தரவாதமளிக்க நேரிட்டது. நல்லமாப்பாண வன்னியனாருடன் கொம்பனியதிகாரிகள் மீண்டும், 1740 இல், உடன்படிக்கையொன்றை எழுதினார்கள். அவ்வாண்டிலே அவர் பேரில் 82 யானைகள் நிலுவையாய் நின்றன. புதிய உடன்படிக்கையிலும் 1747 இல் நிலுவைக்கடன் முழுவதையுந் தீர்த்துக் கொள்வதென ஏற்பாடு செய்யப்பட்டது.[11]

தேசாதிபதி சுரோய்டரின் காலத்தில் (1757 - 1762) நல்லமாப்பாண வன்னியனார்மீது அரசாங்கம் பல குற்றங்களைச் சுமத்த நேரிட்டது. அரசாங்கத்திற்கு அவர் கிழ்ப்படியவில்லை என்றும் கொம்பனிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர் நிறைவேற்றாது ஒல்லாந்தரின் நலன்களுக்கு ஒவ்வாத செயல்களைப் புரிந்தார் என்றும் சுரோய்டர் எழுதியுள்ளார். இக் காரணங்களினாலே அரசாங்கம் அவரைப் பதவிநீக்சஞ் செய்தது.[12] கடமை யானைகளைச் சரிவரக் கொடுக்காதமையினாலேயே நல்லமாப்பாணருக்கு இக்கதி நேர்ந்திருத்தல் வேண்டும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பனங்காமத்திலே நல்லமாப்பாணர் வன்னிபமாயிருந்தார். இறுதியிலே அவர் அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகளை ஏற்படுத்தியதற்குச் சான்றில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே அடங்காப்பற்று வன்னியர் அரசாங்கத்திற்கெதிரான விடயங்களிலே கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கும் எந்தவிதமான

சான்றுகளும் காணப்படவில்லை. கொம்பனியின் அதிகாரம் வன்னிமைகளைப் பொறுத்தவரையில் படிப்படியாக வலுவடைந்தது. சுரோய்டரின் ஆட்சிக்கால முடிவில், 1762 ஆம் ஆண்டில், பனங்காமப்பற்றில் எவரும் வன்னிபமாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அப்பற்று கரிக்கட்டு மூலை, கருநாவல்பத்து என்பவற்றின் வன்னிபமான அகிலேசன் புவிநல்ல மாப்பாண வன்னியனாரின் மேற்பார்வையின் கீழ் விடப்பட்டிருந்தது.[13]

## 2. கரிக்கட்டு மூலை – கருநாவல் பத்து

1. தொம் தியோக புவிநல்ல மாப்பாணர்.
2. அகிலேசன். புவிநல்ல மாப்பாணர்.

கரிக்கட்டுமூலை, கருநாவல்பத்து என்றவிரு வன்னிமைகளும் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே ஒரே வன்னிபத்தின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. அவ்விரு பற்றுக்களையுங் குறிப்பிடுகின்ற ஆவணங்களுள் ஒன்று தொம் தியோக புவிநல்ல மாப்பாண வனனியனாருடன் ஒல்லாந்தர் ஏற்படுத்திய உடன்படிக்கை பற்றியதாகும். மற்றையது புவி நல்லமாப்பாணர் இறந்த பொழுது 1742 ஆம் ஆண்டிலே அகிலேசன் புவிநல்லமாப்பாணர் புதிய வன்னிபமாகக் கற்பிக்கப்பட்டமைபற்றிய நியமனப்பத்திரத்தின் பிரதியாகும். இவற்றுள் முதலாவது ஆவணத்திலுள்ள ஒரு பகுதி மேல் வருமாறு அமைந்துள்ளது.

"இங்கே குறித்திருக்கிற வன்னியில் நிலுவை யானையின் தொகைகளாவது நான்தொம் தியோகபுவிநல்லமாப்பாண வன்னியனார் பிரசித்தமாகச் சொல்லுகிறேன். கருநாவல் பற்றில் இந்தத் திகதி அளவுக்கு 38½ யானையும் கரிக்கட்டு மூலைக்கணக்கு 54 யானையும் பன்றி சுட்டானில் இன்னும் நிலுவை நிற்கிற 12 யானையும் ஆகக் கொம்பஞ்யவுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைக் கடன் 104½ அலியன் யானை. இதில் பன்றி சுட்டானில் நிலுவையாய் நின்ற யானையில் எனக்கு நன்மைப் பகுதியாக 10 யானை சகாயமாய்க் கழித்தபடியாலே முன்னாலே இருக்கிற இனிமேல் 94½ யானை கொடுக்க வேண்டியது....."[14]

புவிநல்லமாப்பாணரின் பேரில் 1738 ஆம் ஆண்டு ஆடி மாதமளவிலே கொம்பனிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கடனாகவிருந்த யானைகளின் தொகை 104½ என்பதும் அத்தொகையிலே பொத்தகக் கணக்கிலிருந்து பத்து யானைகள் கழிக்கப்பட்டன என்பதையும் இங்கு மேற்கோளாகக் காட்டப்பெற்ற உடன்படிக்கையின் பகுதியிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. மிகுதியான நிலுவை யானைகளை வருஷமொன்றுக்கு 9 விதமாகப் பத்து வருஷங்களுக்குட் கொடுத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கரிக்கட்டு மூலை, கருநாவல்பத்து ஆகிய வன்னிப் பிரிவுகளுக்கு ஆண்டுதோறும் அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய யானைகள் 13 என்பது 'இன்னும் வருஷந்தோறும் கப்பத்துக்குக் கொடுக்க வேண்டிய 13 தவிர ...' என்ற உடன்படிக்கையிலுள்ள சொற்றொடரினாலே தெளிவாகின்றது.[15]

கயிலைவன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையத்திலுள்ள காலக் குறிப்பினைப்பற்றி ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தேகமொன்றைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான சான்றும் இவ்வாவணத்திலே கிடைக்கின்றது. பன்றிசுட்டான் என்ற ஊரானது 1720 முதல் புவிநல்லமாப்பாணர் வசமாயிருந்ததென்பதை '.. இன்னமும் மிகுந்த மன்றாட்டத்துடனே கேட்டபடியால் பன்றி சுட்டான் என்கிற ஊரையும் (1)720 ஆண்டு கிடைத்தபடிக்கு இவனுடைய மரண பரியந்தம் கிடைக்கவும்' என்ற வாக்கியங்கள் நிரூபிக்கின்றன.[16] கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையம் 1722 ஆம் ஆண்டிலே எழுதப்பட்டதனாலும் 1720 ஆம் ஆண்டிற் புவிநல்ல மாப்பாணர் மீண்டும் வன்னிமைப் பதவியைப் பெற்றுக் கொண்டமைக்குச் சான்றிருப்பதனாலும் பட்டையத்திலே கூறப்பட்டுள்ள தானம் 1722 ஆம் ஆண்டிற்குப் பல வருடங்களுக்கு முன்பே கொடுக்கப்பட்டது என்று கொள்வது பொருத்தமற்றதாகும். புவிநல்லமாப்

பாணர் 1742 ஆம் ஆண்டு வரை கரிக்கட்டுமூலை, கருநாவல்பத்து ஆகிய வன்னிமைகளின் வன்னிபமாயிருந்தார். தொம் தியோக புவிநல்லமாப்பாணர் மறைந்தபின் அவரின் வழிமுறைச் சந்ததியினரான அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனார் புதிய வன்னிபமாக நியமனம் பெற்றார். புதிய வன்னிமை கற்பிக்கப்பட்ட நியமனப் பத்திரத்தின் பிரதியிலே மேல்வரும் பகுதி அடங்கியுள்ளது.

'' ... கருணவில் பத்துக்கும் கரிக்கட்டுமூலைக்கும் புதிய வன்னிமையாகக் கற்பிக்கப் பட்ட தொம் தியோக அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனாரவர்கள் சக்கடத்திரியவின் சத்தியம் பண்ணின தொலுக்கு நிக்கொலாசு பிறணாந்து முன்னாலே வெளியாங்கம் பண்ணுவித்துக் கடனாளியாக்கித் தன்னைக் கட்டுப்படுத்துகிறது. அதென்னவென்றால் மேலாலே சொல்லப்பட்ட இரண்டு பற்றுக்களும் ஆட்சியில்லாமலே அநுபவிக்கிறதின் பேரிலே வருஷம் ஒன்றுக்குக் கொடுக்க வேண்டிய கடமை யானை 11 அல்லாமல் தன்னுடைய மூதோரான தொம் தியோகு புவிநல்லமாப்பாண வன்னியனார் பேரில் நிலுவைநின்ற அலியன் 75 தன் பேரில் சிமத்திக் கொண்ட படியால் இதிலே ஒன்பது யானையுமாகக் கூட்டி வருஷம் ஒன்றுக்கு இருபது யானை ஒப்புவிக்கத் தக்கதாகவும் அந்த இருபதில்க் குறைபட்ட யானை ஒன்றுக்கு இருநூற்றெண்பது இறையால் அல்லது ஆயிரம்பறை நெல்லு ஒடுக்கலும் வேணும்.

'' சொல்லப்பட்ட நிலுவை யானைகளுக்கும் கடமை யானைகளுக்கும் 1750 ஆண்டு ஆவணி மாதம் கடசியாய் உத்தம கொம்பஞீயவுக்கு யிவர் கொடுபட்டுப் போகவேணுமென்று அதற்காகவுமாக 1738 ஆண்டு இந்தப் புதிய வன்னியனாருடைய மூதோர்களுடனே பழைய கோவேறின தோராகிய இம்மோவு அவர்களாலே எளுதப்பட்ட உத்தம் கொம்பஞீயவின் ......–— கட்டாயமுள்ள தொளிற் கடதாசிப்படிக்கு சொல்லுக்குச் சொல் தவறாமல் (இதுகளெல்லாம்) எழுதுப்பட்டிருக்கும் பேராலே நடக்கத் தக்கதாகச் சம்மதித்துப் பிறதானமாக தன்னையுந் தன்னுடைய இயங்குகிற இயங்காத ஆஸ்த்திகளையும் ........ கட்டுப்படுத்தி வைத்து இப்படி எழுதி முடித்தது.'' [17]

அகிலேசன் புவிநல்லமாப்பாணரின் நியமனப்பத்திரத்திலே பன்றிசுட்டானைப் பற்றிய குறிப்பெதுவும் வராமையால் அவ்வூரானது கொம்பனியின் நிர்வாகத்திலுள்ள பகுதிகளோடு சேர்த்துக் கொள்ளப்பட்டதென்று கருதலாம். அகிலேசன் புவிநல்லமாப்பாணர் தன்பொறுப்பிலிருந்த இரு பற்றுக்களின் பேரிலும் 11 கடமை யானைகளை ஆண்டுதோறுங் கொடுக்க வேண்டியிருந்தது என்பதையும் நிலுவைக் கடனைப் பொறுத்த வரையில் வருஷமொன்றுக்கு மேலதிகமாக ஒன்பது யானைகள் என்ற படிக்கு 1750 ஆம் ஆண்டுவரை கொடுப்பதற்கு அவர் உத்தரவாதமளித்தார் என்பதையும் இப்பத்திரம் தெளிவுறுத்துகின்றது.

1738 - 47 ஆகிய காலப்பகுதிக்குரிய ஆவணங்களிலே குறிப்பிட்ட வன்னிபங்களுள் அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனார் மட்டுமே 1766 ஆம் ஆண்டு வரை அதிகாரத்திலிருக்க முடிந்தது. ஒல்லாந்தரின் நம்பிக்கையினையும் நல்லெண்ணத்தையும் அவராற் பெற்றுக்கொள்ள முடிந்தது. நல்லமாப்பாண வன்னியனார் பதவியினையிழந்த பின் பனங்காமப்பற்று சில காலத்திற்கு அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனாரின் மேற்பார்வையின் கீழ் விடப்பட்டிருந்தது. பின்பு 1766 இல் மேல்பத்து முள்ளியவளை என்ற பிரிவும் இவரின் மேற்பார்வையின் கீழ் விடப்பட்டது.[13] அகிலேசன் புவிநல்லமாப்பாண வன்னியனாரின் பதவிக்காலம் எப்போது முடிவுற்றதென்பதை 1766 க்குப் பின் ஒல்லாந்த அதிகாரிகள் எழுதிவைத்த ஆவணச் சுவடிகளை ஆராய்வதன் மூலமே அறிந்து கொள்ளலாம்

## 3. மேல்பத்து - முள்ளியவளை

1. இலங்கை நாரண வன்னியனார் ( 1715 - 1747 )
2. இலங்கை காவல் புவிநல்லமாப் பாணவன்னியனார் (1747 - 1766? )

இலங்கை நாராயண முதலியார் மயி யாத்தை உடையார் என்னுமிருவரும் மேல்பத்து - முள்ளியவளை என்னும் பிரிவிலே வன்னிபங்களாயிருந்தனர் என்று கயிலை வன்னியனார் மட தர்ம சாதனப் பட்டையங் குறிப்பிடுகின்றது. அச்சாசனம் எழுதப்பட்ட காலத்தில் - 1722 ஆம் ஆண்டில் - இலங்கை நார ( ாய ) ணர் வன்னிபமாயிருந்தார் என்பது இதனாலே உறுதியாகின்றது. 'கந்தப்பர் மைலாத்தை என்பரொருவர் 1615 ஆம் ஆண்டளவிலே வன்னிபமாயிருந்தார் என்பதை கெந்திரிக்கு வெக்கரின் அறிக்கை மூலம் அறிய முடிகின்றது.[19] அவரைச் சாசனங் குறிப்பிடுகின்ற மைலாத்தை உடையாரென அடையாளங் கொள்வோமாயின் மைலாத்தை உடையார் 1715 க்கு முன்பே வன்னிபமாக நியமனம் பெற்றிருக்க வேண்டும். சாசனத்திலே மைலாத்தை உடையாரின் பெயரானது இலங்கை நார ( ாய ) ணரின் பெயரை அடுத்து வருவதால் இருவருள்ளும் பின்னையவரே முதன்மை வன்னிபமாயிருத்தல் வேண்டும். அவ்வாறாகில் இலங்கை நார ( ாய ) ணரும் 1715 க்கு முன்பு நியமனம் பெற்றிருத்தல் வேண்டும். இலங்கை நார ( ாய ) ணர் நெடுங்காலமாக, ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக மேல்பத்து - முள்ளிவளையில் முதன்மை வன்னிபமாய் அமைந்திருத்தல் வேண்டும். அவர் 1747 வரை வன்னிபமாய் விளங்கினார் என்பதை அவ்வாண்டிலே எழுதப்பட்ட ஆவணமொன்றின் மூலமாக அறிய முடிகின்றது.

இலங்கை நார ( ாய ) ண வன்னியனார் இறந்தமையின் விளைவாக 1747 ஆம் வருடம் ஆனி மாதத்திலே கொம்பனியின் அரசாங்கம் புதிய வன்னிபமொருவரை நியமித்தது. புதிய வன்னிமை பற்றிய நியமனப்பத்திரத்தின் பிரதியிலுள்ள வாசகம் மேல் வருமாறு அமைந்துள்ளது.

**1747 ( ஆம் ) வருஷம் ஆனி மாதம் 17 திகதி இலங்கையின் கோவேறினமேந்துவின் பெரிய சக்கடத்தாராகிய மரிபிஸேலுடவெல்ட் ஆன நம்முடைய முகதாவிலே இதினி கீழே சொல்லப்படுகிற சாட்சிப் பேர்கள் முன்னிலையாக மேல்பற்றிலும் முள்ளியவளையிலும் பாதிக்குப் புதுசாய் வன்னிமை கற்பிக்கப்பட்ட தொங் கஸ்பார் இலங்கைகாவல் புவிநல்லமாப்பாண வன்னியனார் சக்கடத்திரியவின் சத்தியம் பண்ணின தொலுக்குவாகிய நீக்கொலஸ் பிறனாந்துவினாலே வெளியாக்கப் படுத்திச் சொல்லி மேலாலே சொல்லப்பட்ட பற்றுக்கள் ஆட்சியன்றியே அனுபவிக்கிறதின் பேரிலே வருஷாந்தங் கொடுக்க வேண்டிய கடமை யானைகளும் தன்னுடைய மூதோரான இலங்கை நாரண வன்னியனார் பேரிலே நிலுவை நின்ற யானைகள் சகலதும் கொடுத்துச் சரிவர நடப்பிக்கும் படிக்குப் பொருந்தி தன்னையும் தன்னுடைய இயங்குற இயங்காத ஆஸ்திகளையும் கீழே கட்டுப்படுத்தி எழுதிக்கொடுத்து கையெழுத்து வைத்தார்.**

இப்படிக்கு கந்தோரில் கணக்கராகிய யுவம் ஆர்ந்த் நோயேபும் ஏறாஸ்மூஸ் அறுநோல்துஸ் கொயிக் பன் மெயிறொப்புவாகிய இந்தச் சாட்சிப் பேர்கள் முன்னியலையாகக் கொழும்புக் கோட்டையிலே எழுதப்பட்டது.''[20]

மேல்பற்றிலும் முள்ளியவளையிலும் பாதிக்குப் புதுசாய் வன்னிமை கற்பிக்கப்பட்ட இலங்கை காவல புவிநல்ல மாப்பாண வன்னியனார் என்ற வர்ணனையானது சொல்லப்பட்ட பற்றுக்களிலே இருவரை வன்னிபங்களாக நியமிக்கும் வழக்கம் இருந்தது என்ற கருத்திற்கு வலியூட்டுமாப் போல் அமைகின்றது. வன்னிப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் இருவர் வன்னிபங்களாயிருந்தனர் என்று கயிலை வன்னியனார் மடதர்ம சாதனப் பட்டையம் குறிப்பிடுகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கவொன்றாகும். மேல்பத்து, முள்ளியவளை என்பனவற்றின் வன்னிபமாக 1747 இல் நியமனம் பெற்ற இலங்கைகாவல முதலியார் எவ்வளவு காலத்திற்கு வன்னிபமாயிருந்

தார் என்பதனை அறிந்து கொள்ள முடியவில்லை. அவருக்குப் பின்பு இரணசூர இரணராஜ முதலியார் என்பவர் மேல்பத்து முள்ளியவளை ஆகியவற்றின் வன்னிபமாயிருந்தார் என்பதையும் அவரிறந்த பின் 1760 ஆம் ஆண்டிலே புதிய வன்னிபமாக அமரக்கோன் முதலியார் நியமனம் பெற்றார் என்பதையுந் தேசாதிபதி சுரோய்டரின் அறிக்கை மூலம் அறிய முடிகின்றது.[21] இலங்கை நாரண வன்னியனார் இலங்கை காவல் புவிநல்ல மாப்பாணரின் மூதோர் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளமையால் இலங்கை காவல புவிநல்ல மாப்பாணர் முன்னையவரின் வழிமுறைச் சந்ததியினர் என்பதும் தெளிவாகின்றது.

## 4. தென்ன மரவடிப் பற்று

1. இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார்.
2. சண்முகப் பெருமாள் வன்னியனார்.
3. சேதுகாவல மாப்பாண வன்னியனார்.

கொழும்பிலுள்ள ஆவணச்சுவடிகள் நிலையத்திற் கிடைக்கின்ற கொம்பனி அரசாங்கத்திற்கும் வன்னியர்களுக்குமிடையிலான உடன்படிக்கைகளிலே கூடுதலானவை தென்னமரவடிப்பற்று, திருகோணமலை ஆகிய வன்னிமைகளைப் பற்றியனவாகும். தென்னமரவடிப் பற்றைச் சேர்ந்த வன்னிபங்களான

1. தொம் அதிரியலு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார், (2) தொம் பிறான்சிஸ்கோ சண்முகப் பெருமாள் சேதுகாவல மாப்பாண வன்னியனார், (3) தொம் யுவாம் சேதுகாவல மாப்பாண வன்னியனார் ஆகிய மூவரைப் பற்றியும் இவற்றிலே குறிப்புக்கள் வருகின்றன. இதுவரை வெளியிடப்பெற்ற ஒல்லாந்தர் காலத்து ஆவணங்கள் எவற்றிலும் இவர்களின் பெயர்களும் இவர்களைப் பற்றிய எந்த விதமான வரலாற்றுக் குறிப்புக்களும் கிடைக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இவர்களுள் இருமரபுந்துய்ய மாப்பாணர் தேசாதிபதி ஒகஸ்ற்றீன் றம்பினாலே தென்னமரவடிப் பற்றுக்குரிய வன்னிபமாக 1722 இல் நியமிக்கப் பெற்றார் என்பதை அவரைப்பற்றிய ஆவணத்திலுள்ள மேல்வரும் பகுதியின் மூலமாக அறிந்து கொள்ளலாம்: "இதின் கிளே கைய்யெழுத்து வைத்த தென்னமரவடிப்பற்று வன்னிபம் தொம் அதிரியலு இருமரபுந்துய்ய மாப்பாணராகிய என்னைக் காலஞ்சென்று போன கோவேர்ணதோர் றம்பு மகாராசா ஆண்டவர் அவர்கள் (1) 722 ஆண்டு அந்த இடத்துக்குக் கற்பிக்கப் பட்டதின் பிறகு ... ...... "[22]

தென்ன மரவடிப்பற்றுக்குக் கடமையானைகளாக வருஷந்தோறும் இரு யானைகளைக் கொடுக்க வேண்டியிருந்தது. இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனாரின் பேரிலே 1738 ஆம் ஆண்டு கொம்பனியாரின் கணக்குப்படி நிலுவையாய் நின்ற யானைகளின் தொகை 19 ஆகும்.[23] எனவே அவர் தான் நியமனம் பெற்ற காலத்திலிருந்து வருடாந்தம் சராசரியாக ஒரு யானையினை மட்டுமே கொம்பனியதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். அவர் தனது கடமை யானைகளைச் சரிவரக் கொடுக்காமையினாலே தனது பதவியை இழக்க நேர்ந்தது. அவர் கொம்பனியதிகாரிகளுக்கு முறையிட்டு நிலுவை யானைகளைக் கொடுப்பதாக உத்தரவாதமளித்து உடன்படிக்கை எழுதியதன் பயனாக மீண்டும் அவருக்கு வன்னிபம் என்ற பதவி கிடைத்தது. இதனை அவரின் நியமப்பனத்திரத்திலுள்ள மேல்வரும் பகுதி உறுதிப்படுத்துகின்றது.

"இங்கே மேலாலே எழுதப்பட்டிருக்கிற தென்னமரவடி வன்னியன் தன்னுடைய நம்பிக்கையாய் உத்தரித்துக் கொடுத்த பொருத்தத்தின் படிக்கு இவனுடைய பிளைகள் எடுக்கப்பட்டு மறுபடியும் இப்போ இவனுடைய பனிவிடையிலே தென்னமரவடிப்பற்று உடையார் தொம் அதிரியலு இருமரபுந்துய்ய மபப்பாண என்குற பட்டத்துடனேயும் இருக்கச் செய்குறோம்."[24]

இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் 1738 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதியன்று நல்லூரிலே கையெழுத்திட்டுக் கொடுத்த உடன் படிக்கையிலே தான் வருஷந்தோறுங் கடமையானைகளையும் தன்பேரில் நிலுவைநின்ற யானைகளைக் குறித்து மேலதிகமான யானைகளையும் கொடுப்பதாக உத்தரவாதமளித்தார். 1738 ஆம் ஆண்டிலே தென்னமரவடி வன்னிபத்தின் பேரில் நிலுவையாய் நின்ற யானைகளின் தொகை 19 என்பதை முன்பு கவனித்தோம். அதில் ஒன்பது யானைகள் சொல்லப்பட்ட வன்னியனார் நியமனம் பெறுவதற்கு முன் - 1722 ஆம் ஆண்டிற்கு முன் - வன்னிபமாய் விளங்கியவரின் பேரில் நின்ற நிலுவை யானைகளாகும். தான் ஏற்படுத்திக் கொண்ட பொருத்தத்தின் படி இவ்வுடன் படிக்கை எழுதப்பட்ட காலம் முதலாக ஐந்தாண்டுகளுக்கு தனது கடமை யானைகளோடு மேலதிகமாக இரு யானைகளை வருடாந்தங் கொடுப்பதற்கு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் உத்தரவாதமளித்தார். அவரின் முன்னோர் பேரில் நிலுவையாயிருந்த ஒன்பது யானைகளைக் குறித்து 1753 ஆம் ஆண்டு முதலாக வருடமொன்றுக்கு ஒவ்வொரு யானையாகக் கொடுத்து ஒன்பது வருடங்களில் நிலுவைக் கடனைத் தீர்த்துக் கொள்வதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அவருக்கு தென்னமரவடிப் பற்று வன்னிபம் என்ற பதவியை மீண்டும் கொம்பனியின் அதிகாரிகள் கொடுத்தார்கள். ஆயினும் தான் மீண்டும் பெற்ற பதவியினையும் அதிகாரங்களையும் நெடுங் ாலத்திற்கு அவரால் அனுபவித்துக் கொள்ள முடியவில்லை.

தொம் பிறான்சிஸ்கோ சண்முகப் பெருமாள் சேதுகாவல மாப்பாண வன்னியனார் 1739 ஆம் ஆண்டிலே தென்னமரவடிப்பற்றுக்குப் புதிய வன்னிபமாக நியமிக்கப்பட்டார்.[25] அதற்கு முன்பாக இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் மறைந்துவிட்டார் என்பது .................. மரித்துப்போன தொம் அதிரியலு இருமரவிலுந்துய்ய மாப்பாண வன்னியனார் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கடனாளியாக்கி எழுதிக்கொடுத்தது' என உடன்படிக்கையொன்றிலே வரும் சொற்றொடர்களினாலே உறுதியாகின்றது.[26] கொம்பனியதிகாரிகள் 1739 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆம் திகதி சண்முகப் பெருமாள் வன்னியனாருக்கு எழுதிக்கொடுத்த நியமனப் பத்திரத்திலே 1730 ஆம் ஆண்டு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனாரிடம் கொடுத்த உடன்படிக்கையின் வாசகமும் இணைக்கப்பெற்றது. இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் தானும் நடந்து கொள்வதாகப் புதிய வன்னிபமான சண்முகப்பெருமாள் வன்னியனார் உத்தரவாதமளித்தார். ஆறு வருடங்களுக்கு மட்டுமே அவர் பதவியிலிருக்க முடிந்தது.

சண்முகப் பெருமாள் வன்னியனார் 1745 ஆம் ஆண்டளவில் இறந்தபடியால் தொம் யுவாம் சேதுகாவல் மாப்பாணர் தென்னமரவடிப்பற்றுக்கு வன்னிபமானார். இதனை '' தென்னமரவடிப்பற்றுக்கு இந் நாளையிலே வன்னிபமாயிருக்கிற தொம் யுவாம் சேது காவல மாப்பாண வன்னியனாரவர்கள் ... .......... .. தம்முடைய மூதோராகிய இந்தப்பற்றிலே வன்னிமையாயிருந்து சென்றுபோன தொம் பிறான்சிஸ்கோ சண்முகப்பெருமாள் சேதுகாவல் மாப்பாண வன்னியனாரவர்கள் பேரிலே நிலுவைமுழுதுங் கொடுத்து '' ...... ...... என வரும் உடன்படிக்கைப் பிரதியின் பகுதியால் அறிந்துகொள்ளலாம்.[27] தொம் யுவாம் சேதுகாவல மாப்பாணரின் பதவிக் காலம் எத்தனையாண்டுகளைக் கொண்டிருந்ததென்பதை அறிந்து கொள்ள முடியவில்லை தேசாதிபதி சுரோய்டரின் காலத்திலே ( 1755 - 1762 ) தொம் பிறான் சிஸ்க்கு சேது காவலமாப்பாணன் என்பவரே தென்னமரவடிப்பற்றில் வன்னிபமாயிருந்தார்.[28]

பதினெட்டாம் நூற்றாண்டிலும் 'வன்னிபம்' என்னும் பதவியானது பரம்பரை உரிமையாயிருந்தது என்று கொள்வதற்கான சான்றுகள் இவ்வாவணங்களிலே காணப்படு

கின்றன. ஒல்லாந்த அதிகாரிகளும் வன்னிமைகளைப் பொறுத்த வரையிலே பரம்பரை உரிமைகளை முற்றாகப் புறக்கணிக்க முற்படவில்லை. கரிக்கட்டுமூலை சருநாவற்பத்து வன்னிபமான அகிலேசன் புவிநல்ல மாப்பாணர் தனக்கு முன் வன்னிபமாயிருந்த 'தன்னுடைய மூதோரான ... புவிநல்ல மாப்பாண வன்னியனார்' என்று குறிப்பிடுவதால் அவர் பின்னவரின் வழிமுறைச் சந்ததியினர் என்பது தெளிவாகின்றது. அதுபோலவே 1747 ஆம் ஆண்டில் மேல்பத்து – முள்ளியவளை வன்னிபமாக நியமனம் பெற்ற இலங்கை காவல புவிநல்ல மாப்பாண வன்னியனாரும் தனக்கு முன் வன்னிபமாயிருந்தவரைத் 'தன்னுடைய மூதோரான இலங்கை நாரண வன்னியனார் எனக் குறிப்பிட்டுள்ளார்.' தென்னமரவடிப்பற்றிலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே தலைமுறை தலைமுறையாக வன்னிபம் என்னும் பதவியைப் பெற்றார்கள் என்று கருதவிடமுண்டு. '...... தம்முடைய மூதோராகிய இந்தப்பற்றிலே வன்னிமையாயிருந்து சென்றுபோன தொம் பிறான்சிஸ்க்கு சண்முகப்பெருமாள் சேதுகாவல மாப்பாண வன்னியனாரவர்கள் பேரிலே நிலுவை முழுதுங் கொடுத்து ......' என தொம் யுவாம் சேதுகாவலமாப்பாண வன்னியனாரின் உடன்படிக்கையிலே வரும் சொற்றொடர்கள் குறிப்பிடத்தக்கவை. □

---

## அடிக்குறிப்புக்கள்

1. சி. பத்மநாதன், 'அடங்காப்பற்று வன்னிமைகள், 1658 – 1697' பண்டார வன்னியன் விழா மலர், வவுனியா, 1982 ஆடி, பக்கங்கள் 77 – 88
2. Simon Casie Chetty, **Ceylon Gazetteer**, Colombo, 1834, pp. 190 - 191. S. Pathmanathan, 'The Vanni Chieftaincies of the Eastern and Western littorals of Sri Lanka', paper presented at the **IATR** national Seminar, Batticaloa, 1976.
3. **Memoir of Hendrick Zwaardecroon** Commandeur of Jaffnapatnam, 1697 trans. Sophia Pietersz Colombo, 1911, pp. 6,97
4. ibid p. 97
5. **Memoir of Hendrick Becker**, 1716, trans. Sophia Pietersz, Colmbo 1914, p. 15.
6. 1738 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே கையெழுத்திடப்பெற்ற உடன்படிக்கையின் பிரதி.
7. மேலது.
8. மேலது.
9. மேலது.
10. மேலது.
11. 1740 ஆம் வருஷம் புரட்டாதி மாதம் கொழும்பில் எழுதப்பட்ட உடன்படிக்கைப் பத்திரத்தின் கையெழுத்துப் பிரதி.
12. **Memoir of Jan Shreuder**, trans. E. Reimers, Colombo, 1964, p. 58
13. மேலது.
14. 1738 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் திகதி கையெழுத்திடப்பட்ட (வெளியிடப்படாத) உடன்படிக்கைப் பத்திரத்திலுள்ளது.

15. மேலது.

16. மேலது.

17. 1742 ஆம் ஆண்டு மாசி மாதம் 21 ஆம் திகதி கொழும்புக் கோட்டையில் எழுதப்பட்ட (பிரசுரிக்கப்படாத) உடன்படிக்கைப் பத்திரத்திலுள்ள பகுதி.

18. **Memoir of Anthony Mooyart** (Commandeur of Jaffnapatnam) trans. Sophia Pieers, Colombo, 1910, p. 5.

19. **Memoir of Hendrick Becker** (1716, trans. Sophia Pietersz, p. 15.

20. ஆவணச் சுவடிகள் நிலயத்திலுள்ள மற்றுமோர் உடன்படிக்கைப் பத்திரம்.

21. **Memoir of Jan Schreuder**, p. 58.

22. 1738 ஆம் ஆண்டு ஆடி 22 ஆம் திகதி வன்னியனாரின் கையெழுத்திடப் பெற்ற (வெளியிடப்படாத) உடன்படிக்கைப் பத்திரம்.

23. மேலது.

24. மேலது.

25. 1739 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19 ஆம் திகதி சண்முகப் பெருமாள் வன்னியனார் கையெழுத்திட்ட (வெளியிடப்படாத) உடன்படிக்கையின் பிரதி, இதுவும் கொழும்பிலுள்ள ஆவணச் சுவடிகள் நிலையத்திலுள்ளது.

26. மேலது.

27. 1745 ஆம் ஆண்டு தொம் யுவாம் சேதுகாவலமாப்பாண வன்னியனாருடன் ஏற்படுத்தப்பட்ட (வெளியிடப்படாத) உடன்படிக்கையின் பிரதி.

28. **Memoir of Jan Shreuder**, p. 58.

## பிற்சேர்க்கை

### *கரிக்கட்டுமூலை - கருநாவல்பத்து வன்னிபம் புவிநல்லமாப்பாணர் யானைதிறைபற்றி ஒல்லாந்தரோடு ஏற்படுத்திய உடன்படிக்கை.*

இப்போது அவடத்திலே எழுந்தருளி இருக்கிற இந்தியாவுக்கு ச. த. ஒடுதினாரியலும் இத்திவுகளுக்கு கோவேர்ணதோரு(ம்) ஆகிய குஸ்தாபு வெல்லம்பன் இம்மொபு அவர்களுடைய துடர்ந்து பிறகே வரப்பட்ட கட்டளைப்படிக்கு இங்கே குறித்திருக்கிற வன்னியில் நிலுவை யானையின் தொகைகளாவது நான் தொம் தியொக புவி நல்லமாப்பாண வன்னியனார் பிரசித்தமாகச் சொல்லுகிறேன். கருனாவல் பற்றில் கணக்கு இந்த திகதி அளவுக்கு $38\frac{1}{2}$ யானையும் கரிக்கட்டுமூலைக் கணக்கு 54 யானையும் பன்றிசுட்டானில் கணக்கு இன்று நிலுவை நிற்கிற 12 யானையும் ஆகக் கொம்பஞீயவுக்கு கொடுக்க வேண்டிய நிலுவைக்கடன் $104\frac{1}{4}$ அலியன் யானை. இதில் பன்றிசுட்டானில் நிலுவையாய் நின்ற யானையிலே எனக்கு நன்மைப் பகுதியாக 10 யானை சகாயமாய்க் களித்த படியால் முன்னாலே இருக்கிற இனிமேல் நான் $94\frac{1}{2}$ அலியன் யானை கொடுக்க வேண்டியது. இன்னும் வருஷந்தோறும் கப்பத்துக்குக் கொடுக்க வேணடிய 13 தவிர இனிமேல் வரப்பட்ட வருஷக்கணக்கு புரட்டாதி மாதம் முதலாக (1)739 ஆவணி மாதம் (?) இருந்தே கொம்பஞீயவின் ரொக்கக் கணக்குப்படி முதலே சொல்லப்பட்ட மேலதிகமான நிலுவையானை 9ம் கொம்பஞீயவுக்கு உத்தரித்துக் கொடுப்பேன். அப்படியே இந்த 22 யானைகளிலே குறையக் கொடுக்க வந்தால் ஒவ்வொரு யானைக்கு (சமானமாக) திடபரமாக 250 இறையால் கொம்பஞீயவில் காசவிலே ஒடுக்குவேனாகவும். என்னுடைய நிலுவை

யானைகள் கொடுத்துத் திருவுள்ளலும் இந்தப்பிரகாரம் ஆகக் கொம்பஞீயவுக்கு நடப்பித்துக் கொள்ளுவேனாகவும். எனக்குச் செய்திருக்கிற உபகாரத்திற்காக வேண்டிக் கணக்கிலே சேரும் 5,000 பறை நெல்லுக்குக் கொடுத்த 2,000 பறை நெல்லுப் போக மற்ற மூவாயிரம் பறை நெல்லும் (1) 739 ஆண்டு ஆவணி மாதம் முதலே கொம்பஞீயவுக்குக் கொடுப்பேனாகவும். இதுகளிலே யாதொன்றுக்கு நான் பிறகே நின்று விட்டேன் ஆனால் பன்றிசுட்டானில் நாள்தோறும் பெற்று வருகிற உண்டான புரோசனங்கள் இறந்துபோகவும். இன்று என் மரணபரியந்தத்துக்கு இந்த ஊரை என் மகாராசா ஆண்டவர் அவர்கள் என்றே (?) இருக்க விட்டுவிட்ட படியால் நான் கொம்பஞீயவுக்கு இணங்க நடக்காத காலத்தில் மேல் ஈனத்துக்குடையவனுமாய் எனக்கு கிடைத்த ஊரு கொம்பஞீயவுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்குவேண்டி என்னுடைய ஆஸ்தி உடைமைகளையும் இதற்கீடாக்கினேன். யாட்பாணம் 1738 ஆண்டு ஆடி மாசம் 22 திகதி. இதின் மேல் தொம் தியொகு புவிநல்லமாப்பாண வன்னியனார் கையெழுத்து வைத்தது.

2. இந்தியாவுக்கு ஒடுதினாரியாலு செயிலோமுக்கும் அதற்குச் சேர்ந்த தலங்களுக்கு (ம்) கோவேர்ணதோரு திரெத்தோடு ஆகிய குஸ்தாவு வெல்லம்பன் இம்மொவு அவர்கள் நிருபித்த கட்டளையை (க்) காணப்பட்டவர்களுக்கும் ஆரோக்கிய முண்டாவதாக.

தொம் தியொக புவிநல்லமாப்பாண வன்னியனார் செய்யப்பட்ட பணிவிடைகளிலே மேலான பொதுவான அதிகவான கழுக்குச் செய்திருந்த மிகுந்த ஏற்பட்ட யானை நிலுவைப் பணிவிடைத்தாட்சிகளை எங்களுடைய பீசித்தவிலே அறிய்ந்தும் உண்டான கோபதாபங்களுக்குளையும் மேலாலே சொல்லப்பட்ட பொருத்தமாக கரிக்கட்டுமூலையும் கருநாவல்பற்றையும் இவன் வசமாக்கி இன்னமும் மிகுந்த மன்றாட்டத்துடனே கேட்டபடியால் பன்றிசுட்டான் என்கிற ஊரையும் 720 ஆண்டு கிடைத்திருந்தபடிக்கு இவனுடைய மரணபரியந்தம் கிடைக்கவும் அதினுடைய புரோசனமும் பெற்றுக் கொள்ளலுமாம். அப்படி ஒரு திட்டமான பொருத்துடனே சொல்லப்பட்ட தொம் தியொகு புவிநல்லமாப்பாண வன்னியனாருடைய மரணத்தின் பிறகு உடனேதானே மற்றுங் கரைச்சி சம்பவித்த பிரகாரமாகப் பன்றிசுட்டானைக் கொம்பஞீயவுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். முன்னாலே சொல்லியிருக்கிற பிரகாரத்துக்கு வருஷத்துக்கு வருஷம் சொல்லப்பட்ட 22 யானை கொடாதிருந்தால் குறைந்த யானைகளுக்கு 250 இறையால் ரொக்கமாக கசாவிலே ஒடுக்கப்படும். அல்லது பணத்தினுடைய இடத்திற்கு 1,000 பறை நெல்லு கொடுக்கப்படும். (1) 739 ஆண்டு ஆவணி மாதம் முதலே ஒரு நாளுந்தாமதம் இல்லை. அந்த வருஷத்தில் ஆவணி மாதம் மூவாயிரம் பறை நெல்லு தவிர முதற் கந்தாயத்துக்கு (க்) கொடுக்க வேண்டியது. இந்தக் காரியங்களிலே யாதொரு தாட்சிகளுள்ள தானல் சொல்லப்பட்ட பன்றிசுட்டானை உடனே தானே கொம்பஞீயவுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் அதிலே வரப்பட்ட சேதபாதங்களில் அவன் பேரிலே சுமதியாய் இருக்கப்படும். இதுதானே முன்னாலே சொல்லி இருக்கிற பிரியம். இதனாலே யாகச் சொல்லப்பட்ட பொருத்தம் ஆகியாலே எழுதப்பட்ட படிக்கு கொம்பஞீயவுக்காக வேண்டி நாங்கள் ஏற்றுக்கொண்டது.

யாட்பாணத்திலே
1738 ஆண்டிலே ஆடி 22 திகதி.